# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 15 சனிக்கிழமை (31-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 196


# மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்
# குடாநாட்டுக்கு உணவுப் பொருள்!

## 3 மாதத் தேவையை கையிருப்பில் வைக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 31

மழை காலம் ஆரம்பமாக இருப்பதால் கப்பல் சேவைகள் சீராக நடைபெறுவதில் தடைகள் ஏற்படலாம். எனவே 3 மாதத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி கையிருப்பில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்த ஈ. பி. டி. பி. தூதுக்குழு மேற்கண்ட கோரிக்கை விடுத்தது.

அலரிமாளிகையில் ஜனாதிபதியை ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தூதுக்குழு சந்தித்த போது, தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

விடுக்கப்பட்ட சில கோரிக்கைகள் வருமாறு:

★ முல்லைத்தீவு தாக்குதலையடுத்து கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் நேற்று மீண்டும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 31

ஹஜ்ஜுப் பெருநாள் விடுமுறையை அரசு ரத்துச் செய்ததை ஆட்சேபித்து கொழும்பில் முஸ்லிம்கள் மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நேற்று மருதானையில் இடம்பெற்ற ஜும்மாத் தொழுகையின் பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஹஜ் விடுமுறையை அரசு ரத்துச் செய்ததைக் கண்டிக்கும் மகஜர் ஒன்றில் கையெழுத்துப்பெறும் கையெழுத்து இயக்கம் ஒன்றும் அங்கு நடத்தப்பட்டது.

''எங்கள் மதம் ஆரம்பித்ததே மக்காவில் ஹஜ் தினத்திலே ஆகும். உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் ஹஜ் பெருநாளைக் கொண்டாடுகிறார்கள். இதற்காக நாங்கள் உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம்'' என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம் ஒருவர் உணர்ச்சி வசப்பட்டுத் தெரிவித்தார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

(இ-10)

## தமிழகம் சென்ற அகதிகளில் 30பேர் விசேட முகாம்களில் தடுத்து வைப்பு

லண்டன், ஓக. 31

இலங்கையில இருந்து தமிழ்நாடு செல்லும் அகதிகளிடையே புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேகத்துக்கிடமானவர்கள் விசேட முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர். இது வரை 30 இளைஞர்கள் இப்படித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பி. பி. ஸி நேற்றுத் தெரிவித்தது.

இலங்கையில் இருந்து வரும் அகதிகளின் அந்தஸ்து என்ன என்பது குறித்து மாநில அரசும் மத்திய அரசும் இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்காக குரல்கொடுக்கும் உள்ளூர் குழுக்கள் மீதும் தீவிரவாதிகளுக்குப் பொருள்கள் வழங்கும் கடத்தல்காரர் மீதும் மாநில அரசு கண்காணிப்பை அதிகரித்துள்ளது.

கடந்த காலத்தில் நடந்தது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் அருகே மோதல்

கொழும்பு, ஓக. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனுக்கு அருகே நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் படையினரின் நிலைகளுக்கு வெளியே விடுதலைப் புலிகள் குழு ஒன்று நடமாடுவதை படையினர் கண்டதும் இந்த மோதல் ஆரம்பமானது என்றும்—

இந்த மோதலின் இரு புலிப்படையினர் கொல்லப்பட்டனர் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

(இ-3)

## படையினரின் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஓக. 31

நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களும்—

அப்பரீட்சையில் சித்தி பெற பாதுகாப்புப் படையினர் வாழ்த்துவதாக—

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் தரப்பில் நேற்று உதயனுக்கு அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-10)

## மாவுடன் உஹண கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், ஓக. 31

''உஹண'' என்ற கப்பல் திருகோணமலையிலிருந்து மாவை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தில் மா ஏற்றும் பணி முடிவடைந்ததும் சில தினங்களில் இக்கப்பல் வந்துசேரும் என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக் கப்பலில் இரண்டாயிரத்து எழுநூறு மெற்றிக்தொன் மா எடுத்துவரப்படும்.

(இ-5)

# உரிய மருந்து இல்லாததால்
# 4 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

## குடாநாட்டில் மருந்துக்குக் கடும் தட்டுப்பாடு!!

யாழ்ப்பாணம், ஓக. 31

மருந்துத் தட்டுப்பாடு காரணமாக உரிய மருந்து கிடைக்காமையால், நான்கு வயதுச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார்!

அவரது நோயைத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட, குறிப்பிட்ட மருந்து யாழ். போதனா வைத்தியசாலையிலும் இல்லை. வெளியார் — தனியார் — மருந்துக் கடைகளிலும் இல்லை.

அதனால் அந்த இளம் பிஞ்சின் உயிர்பிரிந்து தங்கள்செல்வக் குழந்தையை பெற்றோர் இழந்தனர்!

யாழ்ப்பாணக் குடா நாட்டில் நிலவும் கடும் மருந்துத் தட்டுப்பாட்டின் காரணமாக, விளைவாக வெளிச்சத்துக்கு வந்த உயிரிழப்பு இது.

இது போல இன்னும் பல உயிரிழப்புகள் உண்டாகும் ஆபத்து உண்டு. யாழ். ஆஸ்பத்திரியிலேயே ஆபத்தான நோயாளர் பலர் உரிய மருந்தில்லாததால் இறந்து போகக் கூடும் என அஞ்சப்படுகிறது.

மருந்தில்லாமையால் மரணமான மல்லாகத்தைச் சேர்ந்த செல்வராசா ருவிந்தா என்ற நான்கு வயதுச் சிறுமியின் பரிதாபகரமான கதை இது தான்.

கடும் காய்ச்சலுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுமி சுமார் ஒரு மாத காலமாக வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ். குழுவின் கப்பலில் தபால்களை அனுப்பமுயற்சி

கொழும்பு, மற்றும் வெளிநாடுகளுக்குரிய தபால்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் அனுப்பி வைப்பதற்கு யாழ். பிரதம தபாலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கப்பல் எதிர்வரும் நான்காம் திகதி ஒரு தொகுதி நோயாளர்களுடன் புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது—சேர்ந்துள்ள வெளியூர் தபால்களை இக்கப்பலில் அனுப்பி வைப்பதற்கான அனுமதியைப் பெறுவதில் பிரதம தபாலகம் தீவிரமாக உள்ளது.

பல நாள்களாக வெளியூர்த் தபால்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [இ-5]

## ஓய்வூதிய வவுச்சர்களை இங்கே தயாரிக்க முயற்சி

### அரசாங்க அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள தாமதத்தை நீக்கும் வகையில் ஓய்வூதிய வவுச்சர்களை இங்கேயே தயாரிக்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்:

ஓய்வூதிய வவுச்சர்கள் மற்றும் பட்டியல்களை கொழும்பில் கம்பியூட்டர்களில் பதிவு செய்து எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்ட திகதிகளில் ஓய்வூதியம்வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஓய்வூதிய வவுச்சர்கள், பட்டியல்கள்தயார்செய்யும்வேலையை இங்கேயே மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

(இ-8)

# ஈசன் கல்வி நிலையம்

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

## வங்கியாளர் பரீட்சைக்கான வகுப்புகள்

**பகுதி I**

பொருளியல்
வங்கி மூலதத்துவங்கள் ] ஆசிரியர்: திரு. குமாரவேல்

**பகுதி II**

நாணயவியல் கோட்பாடுகளும், நடைமுறைகளும்.
ஆசிரியர்:- திரு. குமாரவேல்

**பகுதி III**

வெளிநாட்டு வர்த்தகமும், நாணய மாற்று வீதங்களும்
ஆசிரியர்: திரு. குமாரவேல்

காலம்:- **01–09–96** ஞாயிறு

நேரம்: பகுதி I **2–3** P.m.
பகுதி II **3–4** P.m.
பகுதி III **4–5** P.m. (42492)

# ST. PATRICK'S COLLEGE JAFFNA

## அனுமதி விண்ணப்பம் - 1997

பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு:
**01-02-91 — 31-01-92**
(இரு திகதிகளும் உட்பட)
பிறந்திருக்க வேண்டும்

நானகாம் ஆண்டு:
**1988** இல் பிறந்திருக்க வேண்டும்.

ஆறாம் ஆண்டு:
**1986** இல் பிறந்திருக்க வேண்டும்.

ஒன்பதாம் ஆண்டு:
**1983** இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப் பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா 125/- **02-09-96** தொடக்கம் **23-09-96** வரை பாடசாலை நேரங்களில் காலை 9.00 மணி முதல்1.00 மணிவரை கல்லூரிக் காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **27-09-96** ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதி பரீட்சைத்தினம் **12-10-96** காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமுகம் தர வேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் காலை |
|---|---|---|
| 9 | 8. 00 | 8. 30 |
| 6 | 8. 00 | 8. 30 |
| 4 | 8. 00 | 8. 30 |
| 1 (இல: 01-100) | 8. 00 | 8. 30 |
| 1 (இல: 101-250) | 10. 30 | 11. 00 |

★ 6ஆம் 9ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

நாட்டின் நிலைமை காரணமாக திடீர் மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டியிருந்தால் அது குறித்து பாதுகாவலன் செய்தித்தாள் மூலமும் உதயன் பத்திரிகை மூலமும் அறிவிக்கப்படும்.

— கல்லூரி அதிபர்

(சி/2822)

## சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை, ஓக. 31

யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினர். நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் சமய அறிவுப் போட்டியும், பண்ணிசைப் போட்டியும் இம்முறையும் நடைபெறும்.

சமய விவகாரக் குழுவின் தலைவர் டாக்டர் இ தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார். [அ-30]

## மகளிர் அபி. நிலையம் உதவி

யாழ்ப்பாணம், ஓக. 31

மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ். மாநகரசபை யுனிசெப் பிரிவினருடன் இணைந்து செயற்படுத்தி வரும் தாய், சேய் நல போசாக்குத் திட்டத்தின் கீழ், இதுவரை நெடுங்குளம், பாசையூர், கண்டி வீதி, வண்ணார் பண்ணை ஆகிய இடங்களில் இயங்கிவரும் நோயாய் நிலையங்களில் பிரசவ தாய்மார்களுக்கும், சிறுவர்களுக்கும் ஜீவாகாரப் பைக்கெட்டுகளை இலவசமாக வழங்கியுள்ளது.

அத்துடன் போசாக்கு குறைபாடு, தாய்ப்பாலின் முக்கியத்துவம், நிறையுணவு, கர்ப்பவதிகள் பராமரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

இத்திட்டம், தொடர்ந்து பல நோயாய் நிலையங்களில் செயற்படுத்தப்படவுள்ளதாக மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

## அஞ்சலிக் கூட்டம்

வலிகாமம்தெற்கு, ஓக. 31

இணுவில் கந்தசாமி கோயில் இடைக்கால தர்மகர்த்தா சபையினரும், இளந்தொண்டர் சபையினரும் இணைந்து பண்டிதர் அமரர் இ. திருநாவுக்கரசு ஞாபகார்த்த அஞ்சலிக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர்

இன்று சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் இளம் தொண்டர் சபை மண்டபத்தில் அஞ்சலிக்கூட்டம் நடைபெறும். [அ-152]

## கொடிகாமம் பளைப்பகுதிக்கு மண்எண்ணெய்

தென்மராட்சி ஓக. 31

கொடிகாமம், பளை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிலையங்கள் மூலம் மண்எண்ணெய் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இந்த எரிபொருள் நிலையங்கள் தற்போது திருத்தப்பட்டு வருகின்றன. (இ-117)

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

31 - 08 - 1996

## ★ செல்வன் குருபரன் ★

புலோலி கிழக்கு விஸ்வகுல ஒழுங்கை
பருத்தித்துறையைச் சேர்ந்த
சிவநேசன் ஜெயகௌரி தம்பதியினரின்

செல்வப்புதல்வன் குருபரன் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (31 - 08 - 1996) சனிக்கிழமை தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அன்புச் சகோதரி சிந்துஜா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பாஹ்றின் பெரியப்பா, பெரியம்மாமார், மாமிமார், மாமாமார், குலம் மாமா, சித்திமார், சித்தப்பா (பிரான்ஸ்), அண்ணன்மார், மச்சாள்மார், மச்சான்மார், நல்லூர் கல்வியங்காட்டைச் சேர்ந்த தாத்தா குடும்பம் ஆகியோர் குருமணல் . கந்தன் அருளால் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

புலோலி கிழக்கு
விஸ்வகுல ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி/2825)

# நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 98

## இரசாயனவியல்

திரு. A. மகாதேவா

ஆரம்பம்: **02 - 09 - 1996** திங்கள்
பிற்பகல் **3-00** மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(42490)

# காணவில்லை

மல்வம் உடுவிலைச் சேர்ந்த
**ஆசீர்வாதம் பரணி**

என்பவர் சைக்கிளில் 20-6-96 புதன்கிழமை காலை 9 மணிக்கு புறப்பட்டவர் இன்னும் வீடு திரும்பவில்லை. வயது 22, உயரம் 5' 4'' பொது நிறமுடையவர். வசிக்கும் இடம்: மல்வம், உடுவில் சுன்னாகம். கண்டவர்கள் தயவுசெய்து அறியத்தரவும்.

தகவல்: ஆ. புனிதவதி
மல்வம், உடுவில்.

[42493]

# பாராட்டுகின்றோ

எமது அதிபர்
**அருட்செல்வி எம். ஜெறோம் A C**

அவர்கள் செலாட் [SLAAED] நிறுவனத்தின் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது பெற்றுக் கொண்டதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியுடன் பாராட்டுவதுடன் அவரைப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்சங்கம்.

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
31-08-96

(42500)

# ஆண்டு - 5 புலமைப்பரிசில் '96

மாதிரிப் பரீட்சை - I **01-09-1996** ஞாயிறு
மாதிரிப் பரீட்சை - II **04-09-1996** புதன்

வழமைபோல் 6 பிரிவுகளாக நடத்தப்படும்.

96/14 பயிற்சிப் பரீட்சையில் உயர்ந்த புள்ளி பெற்றவர்கள்:

செல்வி ப. உமாசாந்தி — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
செல்வி ச. ருக்ஷா — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
செல்வன் ச. நடராஜசர்மா — சென். ஜோண் பொஸ்கோ
செல்வி இ. வித்தியா — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
செல்வி மு. மேரி நிரோஜினி — சென். ஜோண் பொஸ்கோ

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்.

பரீட்சைப் பகுதி - **BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(42497)

# யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## பாணின் விலை ரூபா 8.00

அரசாங்கத்தினால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டமையால் **01-09-1996** ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பாணின் விலை **7** ரூபா **50** சதத்திலிருந்து ரூபா **8.00** ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படும் பாணுக்கான விற்பனைக் கழிவு —/**25** சதத்தில் எதுவித மாற்றமும் இல்லை என்பதை சகல வர்த்தகப்பெருமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிறை, தரம், விலை ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்தால் எமக்கு அறியத்தரவும்.

மாவட்டச் செயலாளர்

நிரந்தர முகவரி:
யா. மா. பே உ. ச.
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தற்காலிக முகவரி:
யா மா. பே. உ. ச
இல 39, 3ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/2826)

# கட்டாய இராணுவ சேவை முயற்சி பலன் எதுவும் தரப்போவதில்லை!

யாழ் குடாநாட்டை தக்க வைத்துக் கொள்வதற்காக அங்கு அனுப்புவதற்கு பெருந் தொகையான படையினரின் தேவை ஏற்பட்டிருந்தது. அரசுக்கு முக்கிய தலையிடியாக உள்ளது. இதற்காக படைக்குஆட்சேர்ப்பதற்காக- 10,000 பேருக்கான - விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தும் இதுவரை 1800 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள். படையில் சேர்ந்து கொள்வதற்கு பொதுவாகவே தயக்கம் காட்டப்படுவது மட்டுமல்லாமல், இராணுவத்திலிருந்து ஓடிப்போன 20,000 பேரில் மூவாயிரம் பேர் மட்டுமே அரசாங்கத்தின் பொது மன்னிப்பு அறிவிப்பை அடுத்து திரும்ப வந்து சேர்ந்துள்ளனர்.

தற்போது நடந்து கொண்டிருக்கும் பெரும் யுத்தத்தில் பெருமளவு இராணுவத்தை குவிக்க வேண்டியுள்ள வேளையில், இராணுவத்தில் சேர்ந்து கொள்ள பெருமளவில் இளைஞர்கள் முன்வராமை அரச மட்டத்தில் பெரும் அதிருப்தியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்திவிட்டுள்ளது. அண்மையில் கண்டி மத்திய சந்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய உள்துறை பிரதி அமைச்சர்

ஒரு புனிதப் பணியாக இனவாத வெறியூட்டும் விதத்தில், அறிவிக்கப்பட்டும். இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கான வயதெல்லையைக் குறைத்தும் கூட பெருமளவில் இளைஞர்கள் கவரப் படாமை இத்தகைய கட்டாய இராணுவ சேவையைப் பற்றிய முடிவை நோக்கி அரசாங்கத்தைத் தள்ளிவருகின்றது எனலாம்.

கிரியல்ல கூறியவை

''இந்த நாட்டின் ஆரம்பத்தில் அதாவது போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த 1505-ம் ஆண்டளவில் இலங்கையல் நூறு வீதம் சிங்களவர்களே இருந்தார்கள். இப்போது அவர்களது சதவீதம் 70 வீதம் ஆக குறைந்து விட்டது எவ்வளவு விலை கொடுத்தாயினும் இந்த நாட்டின் சிங்கள பௌத்தர்கள் தொகை அருகிவருகின்ற துயரமான நிலையை நிறுத்தியாக வேண்டும்'' — என்று பிரதியமைச்சர் அக் கூட்டத்தில் மேலும் பேசியிருந்தார்.

பிரச்சினையை அணுகுவதில் அரை மனத் தன்மையைக் காட்டியபடி யுத்தத்தில் தீவிரமாக தனது சகல சக்திகளையும் ஒன்று குவித்துள்ளது யுத்தத்தால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அழிவுகள், பொருளாதார இழப்புக்கள் என்பவை நாட்டைப் பெரும் பொருளாதார நெருக்கடியை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே கடந்த ஓராண்டு காலத்துள் 1000 கோடி ரூபா மேலதிகமாக யுத்தத்திற்காக செலவு செய்யப்பட்டு விட்டதாக அமைச்சர் ஜி.எல் பீரிஸ் அறிவித்துள்ளார். இந்தத் தொகை இனிவரும் காலங்களில் இன்னும் அதிகமாக அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லல.

## தமிழர், சிங்களவர் ,முஸ்லிம்கள் அனைவரும் யுத்தத்தை வெறுக்கிறார்கள்

### வாக்குறுதிகள் காற்றோடு போயின

தவிரவும் அரசாங்கம் கொடுத்த எந்த வாக்குறுதியைத் தானும் இன்றுவரை நிறைவேற்றியதாகக் கூற முடியாது பாண்விலை ஏற்றப்படாது என்பது முதல் 1995 ஜூலை 15 ஆம் திகதிக்குள் நிறைவேறு ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவு கட்டப்படும் என்று அறிவித்தது வரை எந்த தேர்தல் வாக்குறுதிகளையும் அது நிறைவேற்றவில்லல. நிறைவேற்றா விட்டாலும் பரவாயில்லை. சிலவற்றில் அதற்கு நேரெதிராகவும் செயற்பட்டுவருகிறது. உதாரணமாக அமெரிக்க ஒலிபரப்பு நிலயத்திற்கு (Voice of America) அனுமதி வழங்கியது. மின்சார சபையை தனியார் மயமாக்க முயற்சிப்பது அமெரிக்க இராணுவ அதிகாரிகளை தருவித்து இலங்கையிலுள்ள படைத் தளங்களில் பற்சி வழங்குவது போன்ற இலங்கையின் சுயாதிபத்தியத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இத்தகைய வெறும் வாய்ச் சொல்லில் மட்டுமே சாதனையைச் செய்துவரும் ஒரு அரசாங்கம் ''சிங்கள பௌத்தத்தைக் காப்பாற்றும் என்று எப்படி நம்புவது? எந்த நம்பிக்கையில் சாகத் தயாராக இராணுவத்தில் சேர்வது? — இதுவே இன்றுள்ள சிங்கள இளைஞர்கள் மத்தியிலான கேள்வியாக உள்ளது.

### உடைப்பில் போட்டது

தொழிலாளர் சாசனம் வரையப்பட்டு அது தொழிலாளர் நலன்களைக் காக்க சட்டமாக்கப்படும் என்று பரவலாகப் பிரசாரம் செய்யப்பட்ட போதும், இப்போது அதை உடைப்பில் போட்டு விடலாம் என்ற அபிப்பிராயம் ஆளுங்கட்சிக்குள் வலுத்து விட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலிட வரமாட்டார்கள் என்பதால் இவையெல்லாம் நடைமுறைக்கு உதவாத தேவையற்ற ஒன்று என்ற அபிப்பிராயத்தை இப்போது சிரேஷ்ட அமைச்சர்களே சால்லத் தொடங்கியுள்ளனர்.

தொழிலாளர் நலன் பற்றி நிறையப் பேசிய அரசாங்கம் அவர்களின் வேலைநிறுத்தத்தை துப்பாக்கி முனையில் நசுக்கிய வரலாறு ஒன்றும் புதியது அல்ல.

இந்த நிலையில் — புலிகளுக்கு எதிராக - பயங்கரவாதத்திற்கு எதிராக — யுத்தத்தில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும், அதனால் முழு உலகமும் தம்மை ஆதரிப்பதாகவும் அரசாங்கம் எவ்வளவுதான் கூறிய போதும் அது தன் நாட்டு மக்களது ஆதரவை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது என்பதே உண்மை.

ஆயுத வியாபாரத்தில் கவனமாக உள்ள அமெரிக்காவும் (அது அண்மையில் பலரக ஆயுதங்களை இலங்கைக்கு விற்றுள்ளது என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது) அது போன்ற பிற நாடுகளும் இந்த யுத்தத்தை ஆதரிக்கலாம்.

ஆனால் யுத்தத்தின்பலனை இரத்தமும் சதையுமாக அனுபவித்துக் கொண்டிருக்கிற, தமது சொத்துக்களையும் உறவினர்களையும் நாளுக்கு நாள் இழந்து கொண்டிருக்கிற இலங்கை மக்கள், அவர்கள் தமிழர்களோ, சிங்களவர்களோ, முஸ்லிம்களோ யாராயினும் ஆதரிக்கப் போவதில்லை.

எனவே யுத்தத்துக்கு பலாத்காரமாக ஆட்சேர்க்கும் முயற்சியை தேசத்தின் முழு இளம் சமுதாயத்தையுமே அநியாயமாக அழிக்கின்ற ஒன்றாகவே அவர்கள்இனங்காண்பார்கள்.

### ஆக்கிரமிப்பு யுத்தம் சமாதான யுத்தமல்ல

அரசாங்கம் இன்று செய்து கொண்டிருப்பது ஓர் ஆக்கிரமிப்பு மனோபாவத்துடனான யுத்தம் என்பதே உண்மை. ஒரு சில வரலாற்றுக் குருடர்கள் கருதுவது போல இது ஒன்றும் சமாதானத்துக்காக நடாத்தும் யுத்தம் அல்ல.

ஜனாதிபதி சந்திரிகா முன்னொரு முறை சொன்னார்: ''நாடு ஏற்கனவே பிளவுண்டு தான் இருக்கிறது. அதை ஒன்றிணைப்பது தான் எமது தேவை'' என்று. ஆனால் பதவிக்கு வந்தபின் அவர் அதை மறந்துபோய்விட்டார்

பிளவுண்டிருப்பதை பலவந்தமாக ஒன்றிணைக்க முடியாது என்பதை அவர் மறந்து போனது ஒரு துரதிர்ஷ்டம் தான். இந்த யுத்தம் அவரது ஒட்டு முயற்சிக்குப் பதில் மேலும் மேலும் மோசமான பிளவை நோக்கித்தான் நாட்டை இட்டுச் செல்கிறது

இதை ஜனாதிபதி உணரா விட்டாலும். இலங்கையின் மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

விரைவில், வியட்நாமில் யுத்தத்திற்கு ''எமது பிள்ளைகளை அனுப்பாதே'' என்று கோரிய அமெரிக்கர்களின் குரலை ஜனாதிபதி அவர்கள் தெற்கிலே கேட்கத்தான் போகிறார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

> கொழும்பிலிருந்து வெளிவரும் ''சரிநிகர்'' சஞ்சிகையில் ''கட்டாய இராணுவசேவை'' என்ற தலைப்பில் ''நாசமறுப்பான்'' என்ற புனைபெயரில் எழுதப்பட்ட கட்டுரையில் கட்டாய இராணுவ சேவை பற்றி எழுதப்பட்ட தகவல்கள் இங்கு வெளியாகின்றன. (ஆ-ர்)

> ''வரலாற்றுப் பொய்களைப் புனைந்து உணர்ச்சியேற்றிய போதும், தம்மைக் கொலைக்களத்துக்கு அனுப்பும் தேவையற்ற ஒரு யுத்தத்திற்கு பலியாக சிங்கள இளைஞர்கள் தயாரில்லை என்பது இப்போது தெளிவாகி வருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பிரதானமாக இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது யுத்தத்தை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டே பதவிக்கு வந்தது. ஆனால் அரசியல் ரீதியாக பிரச்சினையை அணுகுவதில் அரை மனத்தன்மையைக் காட்டியபடி யுத்தத்தில் தீவிரமாக தனது சகல சக்திகளையும் ஒன்று குவித்துள்ளது.''

லக்ஷ்மன் கிரியல்ல வெளிப்படையாகவே இதைத் தெரிவித்துள்ளார்.

மீளக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைத் தக்க வைத்துக் கொள்ள ஒருஇலட்சம் இராணுவ வீரர்கள் தேவையாக உள்ளனர். இவ்வாறு இராணுவத்தில் சேருவதற்கு யாரும் முன்வராத பட்சத்தில், பல பிறநாடுகளில் உள்ளது போல கட்டாய இராணுவ சேவையை நடைமுறைக்கு கொண்டுவருவது தவிர்க்க முடியாமல் இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். இராணுவத்தில் சேர்வது தேசத்தைக் காப்பாற்றும்

இத்தகைய வரலாற்றுப் பொய்களைப் புனைந்து உணர்ச்சியேற்றிய போதும், தம்மைக் கொலைக்களத்திற்கு அனுப்பும் தேவையற்ற ஒரு யுத்தத்திற்குப் பலியாக சிங்கள இளைஞர்கள் தயாரில்லை என்பது இப்போது தெளிவாகி வருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பிரதானமாக இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது யுத்தத்தை நிறுத்தி. சமாதான வழியில் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டே பதவிக்கு வந்தது. ஆனால் அரசியல் ரீதியாக

### இன்னமும் காலம் பிந்திவிடவில்லை

ஆயினும், இன்னும் காலம் பிந்திவிடவில்லை என்ற உண்மையையும் நாம் மறக்கக் கூடாது.

இன்னுமுள்ள காலம்
அச்சந்தரும் வண்ணம்
மிகச் சிறியதே ஆனாலும்
இருக்கிறது
இதை அரசாங்கம் புரிந்து கொள்வது
நல்லது!..

★

# இலங்கை கிரிக்கெட் வீரருக்கான அன்பளிப்பு

## எதிர்பார்த்தபடி இல்லையாம்

உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு வாக்குறுதியளித்தபடி நிதி மற்றும் அன்பளிப்புகள் வழங்கப்படவில்லை.

''ராவய'' பத்திரிகை மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்ற போது பல நிறுவனங்களும், கிரிக்கெட் ரசிகர்களும் பெருமளவில் நிதியையும், பொருள்களையும் அன்பளிக்க முன்வந்தனர்.

அவர்களது பெயர் விவரங்களும் அவர்களின் அன்பளிப்புகளின் விவரங்களும் பத்திரிகைகளில் வெளியாகின.

இந்தப் பட்டியலின் படி இலங்கை அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் 15 இலட்ச ரூபா அன்பளிப்பாக கிடைத்திருக்க வேண்டும். ஆனால் கிரிக்கெட் வீரர் ஒவ்வொருவருக்கும் தலா ஒன்றரை இலட்ச ரூபாவே வழங்கப்பட்டுள்ளது என்று ராவய மேலும் தெரிவிக்கிறது. (இ- 10)

# வினைத்திறன் காண் தடைப்பரீட்சை

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச்சேவை பிரிவினால் இலங்கைப் பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றும் தரம் i, தரம் ii, தரம் iii ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை விரைவில் நடத்தப்பட உள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் அதிபர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கல்விச் சேவைக்குழுவின் பதில் செயலாளர் திரு. எஸ். பிரேமரத்தினாகோரியுள்ளார்

விண்ணப்ப முடிவு திகதி செப்ரெம்பர் 20 ஆம் திகதி ஆகும். (இ-152)

# மெய்வல்லுநர் மற்றும் தமிழ்த்திறன் போட்டிகள்

## பாடசாலைகளில் நடைபெறும்

தென்மராட்சி, ஒக. 31

யாழ். மாவட்ட பாடசாலைகள் மூன்றாம் தவணைக் காலத்தில் மெய்வல்லுநர்ப் போட்டிகள், தமிழ்த் திறன் போட்டிகள் ஆகியவற்றை நடத்தவேண்டும் என யாழ். கல்வி வலயம் Iஇன் பணிப்பாளர் சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை ஆடம்பரமற்ற முறையில் நடத்தலாமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

தமிழ்த்திறன் போட்டிகளில் நடனம் போன்ற சில நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டு ஏனைய நிகழ்ச்சிகளை நடத்துமாறும்—

கூடுமானவரை பழைய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளை சேர்த்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்ட தமிழ்த் திறன் போட்டிகள் இவ்வருடம் வவுனியாவில் நடைபெறவுள்ளதால் வலயம், கோட்டம், மாவட்டப் போட்டிகளை நடத்த ஒத்துழைக்குமாறும் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-117)

# இஸ்ரேல் - பலஸ்தீனம் மீண்டும் பேச்சு நடத்தும்

ஜெருசலம், ஓக. 31

பலஸ்தீனரும், இஸ்ரேலரும் மீண்டும் அமைதிப் பேச்சை ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேற்குக்கரையிலும், காஸாவிலும் நேற்று முன்தினம் நடந்த நான்கு மணி நேர வேலை நிறுத்தத்தையடுத்து இருதரப்பின் உயர் அதிகாரிகளும் ஜெருசலத்தில் சந்தித்தனர்.

அடுத்த வாரம் பேச்சுக்கள் தொடங்கும் என்று அவர்கள் கூறினர்.

நித்தனியாகோ இஸ்ரேலிய பிரதமராக வந்த பின்னர் 3 மாதங்களாக பேச்சு தடைப்பட்டிருந்தது.

பலஸ்தீனர்கள் சம்பந்தமாக இஸ்ரேலின் புதிய அரசு கடும்போக்கை கடைப்பிடிக்க ஆரம்பித்ததை அடுத்தே பேச்சு தடைப்பட்டது.

மேற்குக் கரையில் உள்ள யூத குடியிருப்புக்களை விஸ்தரிப்பதற்கு இஸ்ரேலின் புதிய அரசு நடவடிக்கை எடுத்து வருவதை ஆட்சேபித்தே மேற்குக் கரையிலும் காஸாவிலும் பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (இ-3)

## மலேசியா- சிங்கப்பூர் மீண்டும் இணையுமா?

சிங்கப்பூரை மலேசியாவுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுப்பப்பட்டு வருகிறது.

எனினும் சிங்கப்பூரில் உள்ள பல அமைப்புக்கள் இதனைக் கண்டித்துள்ளன.

சிங்கப்பூர் தனித்தன்மையுடன் வளர்ந்து விட்டதால், மலேசியாவுடன் அது இணையத் தேவையில்லை என்று பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மலேசியாவுடன் முன்னர் இணைந்திருந்த சிங்கப்பூர் தனியாக பிரிந்து அபிவிருத்தியடைந்து உள்ளதாகவும் — இருநாடுகளும் மீளவும் இணைவதால் பயன் ஏதும் இருக்காது என்றும் — சமூக நிறுவனங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (இ 3)

## அழகு ராணி போட்டிக்கு எதிர்ப்பு

மணிலா, ஓக. 31

நவம்பர் மாதம் பங்களூர் நகரில் நடக்கவிருக்கும் உலக அழகுராணிப் போட்டியை அரசு தடை செய்யாவிட்டால் போட்டி நடைபெறும் சமயம் அந்த அரங்குக்குள் தற்கொலைத் தாக்குதல் நடத்தப் போவதாக ''மஹிலாயாக்கிரம்'' என்ற பெண்கள் விழிப்புணர்வுக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசு இப்படிப்பட்ட ஆபாசங்களை அனுமதிப்பது அதிர்ச்சி அளிக்கிறது என்று இந்த அமைப்பின் தலைவி சசிகலா கூறியுள்ளார். (இ-3)

# கிளின்ரனின் பிரசார நிபுணர் பதவி துறப்பு

வாஷிங்டன், ஓக. 31

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் தேர்தல் பிரசார நிபுணர் றிக் மோறிஸ் பதவி துறந்து விட்டார்.

அவர் தேர்தல் இரகசியங்களை ஒரு விலைமாதிடம் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

கிளின்ரனுக்கு தாம் ஒரு பிரச்சினையாக இருக்க விரும்பவில்லை என்றும்.

அதனால் பதவி விலகுவதாகவும் — அவர் சிக்காக்கோவில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

அதிபர் கிளின்ரன் அதை ஏற்றுக் கொண்டு கடந்த இரு ஆண்டாக திரு. மோறிஸ் ஆற்றிய பணிக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

48 வயதான திரு. மோறிஸ் 37 வயது விலைமாது ஒருத்தியுடன் கடந்த ஓராண்டாக தொடர்பு வைத்திருந்தார் எனக் கூறப்படுகிறது. (இ - 3)

# வங்கி அதிகாரியை மிரட்டிய செய்தியாளர்கள் கைது!

சென்னை, ஓக. 31

பத்திரிகைச் செய்தியாளர்கள் இரண்டு பேர் மதுரையில் வங்கி அதிகாரி ஒருவரை மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

வங்கிஅதிகாரி தங்களுக்கு25 ஆயிரம்ருபாபணம்கொடுக்காவிட்டால், அந்த வங்கியில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் ஊழல் பற்றி தாங்கள் பத்திரிகையில் செய்தி வெளியிடப் போவதாக அவர்கள் மிரட்டினார்கள் என காவல் துறையினர் கூறினார்கள்.

இந்தச் சம்பவத்துக்குப் பின் இந்தப் பத்திரிகைச் செய்தியாளர்களைப் பிரஸ்தாப வங்கி அதிகாரி ஓர் இடத்துக்கு வரச் சொல்லி அங்கு வைத்து அவரும் அவரைச்சேர்ந்தவர்கள் சிலரும் அவர்களைத் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது.

செய்தியாளர்களைத் தாக்கியோர் மீதும் தற்போது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-5)



லாவண்யா

பல்,மூக்குக் கண்ணாடி அகம்

செவ்வாய், வியாழன், சனி

காலை 8-30 மணிமுதல் பகல் 12-30 மணிவரை

யாழ். வீதி, நெல்லியடி.

(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுபவர், கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர். இன்றே நாடுங்கள்:

Dr. றெஜி சொலமன்

நெல்லியடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2737)

## 35 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு: 10-04-1915



உதிர்வு: 29-07-1996

அமரர்

### ஆழ்வயினார் சுப்பிரமணியம்

(நாவலர் மடம் நவிண்டில்- பிரபல மெக்கானிக் மணியம்]

அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் திருவுருவமாகவும் எங்கள் குல விளக்காய் சுடர்விட்டு அணையாத தீபமாகி எம்மை ஆறாத்துயரில் விட்டு மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கிறோம்.

அன்புடையீர்; 29-07-1996திங்கள் சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு ஆ. சுப்பிரமணியம் அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள், மதிய போசனம் என்பன அவரது இல்லத்தில் நாளை (01-09-1996) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்,

இங்ஙனம்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குலனை விநாயகர் வீதி,
நவிண்டில்,
கரவெட்டி.

(42481)

# தீர்வு முயற்சி தாமதமானால் யுத்த நிறுத்தம் முறிவடையலாம்

## செச்சின்ய நிலவரம் குறித்து எச்சரிக்கை

செச்சின்யப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும் முயற்சி தாமதப்படுமேயானால் இப்போது ஏற்பட்டுள்ள சண்டை நிறுத்த ஒப்பந்தம் தோல்வியில் முடியலாம் என ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்ஸாண்டர் லெபேட் எச்சரித்துள்ளார்.

ரஷ்யப்படைகளுக்கும், செச்சின்ய பிரிவினை வாத கிளர்ச்சி வாதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தி சண்டை நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதில் வெற்றி கண்டவரான இவரின் கருத்தை ரஷ்யா உதாசீனம் செய்ய முடியாது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

அதேவேளை— குறொஸ்னியில் இருந்து ரஷ்ய துருப்புக்களும், செச்சின்ய கிளர்ச்சியாளர்களும் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

சண்டை நிறுத்தத்தை மேற்பார்வை செய்ய இரு தரப்பினரும் நகரில் இயங்க உள்ளனர்.

சண்டை நிறுத்தம் ஏற்பட்டதையடுத்து குறொஸ்னியில் இருந்து 10 ஆயிரம் ரஷ்யப் படைகளும், 2 ஆயிரம் கிளர்ச்சியாளர்களும் வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல்லாயிரம் ரஷ்ய வீரர்கள் செச்சின்யாவின் தென்-மேற்கு மலைப்பிரதேசத்தில் இருந்து வெளியேறத் தொடங்கி உள்னனர். (இ-3)

# பூரண சுயாட்சிக்கு ஆதரவு இல்லை

செச்சின்ய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்ஸாண்டர் லெபேட்டின் முயற்சிகள் பின்னடைவு கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நடந்த ரஷ்ய உயர்மட்ட அமைச்சர்கூட்டம், செச்சின்ய பகுதிக்கு பெரும் அளவு சுயாட்சி அதிகாரம் வழங்கும் லெபேட்டின் அரசியல் தீர்வுத் திட்டத்தை நிராகரித்துள்ளது.

அதிகளவு சுயாட்சி வழங்கும் யோசனைக்கு பிரதமர் விக்டர் செர்னமிர்தன் தலைமையிலான ஒரு குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அமைச்சர்களின் அந்தக் கூட்டத்தில் அதிபர் யெல்ட்ஸின் கலந்து கொள்ளவில்லை.

அதே வேளை — செச்சின்ய கிளர்ச்சி வாதிகளுடன் மேலும் பேச்சு நடத்த லெபேட் நேற்று செச்சின்யத் தலைநகர் குறொஸ்னி சென்றுள்ளார். (இ-3)

# முன்னாள் அமைச்சர்கள் மூவருக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல்?

சென்னை, ஓக. 31

முன்னாள் அமைச்சர்கள் எஸ். கண்ணப்பன், எஸ். முத்துச்சாமி, பி. அரங்கநாயகம் ஆகியோருக்கு எதிரான முதல் தகவல் அறிக்கை தயாராக இருக்கிறது என்றும்—

ஓரிருநாள்களில் அது பதிவு செய்யப்படும் என்றும்— மாநில இலஞ்ச ஒழிப்பு இயக்குநர் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்பிணை அனுமதிகோரி தாக்கல் செய்த மனுமீதான விசாரணையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

ஊழலில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில் பாரபட்சம் ஏதேனும் காட்டப்படுகிறதா என்றும்—

போட்டி அ. தி. மு. க தலைவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் — நீதிபதி சிவப்பா கேட்டதற்கு, முன்னாள் அ தி. மு. க அமைச்சர்கள் தொடர்பான புலன் விசாரணை நடத்தப்படுவதில் எந்தப் பாரபட்சமும் காட்டப்படவில்லை என்று அரச வழக்கறிஞர் கூறினார்.

முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், எஸ். முத்துச்சாமி, பி. அரங்கநாயகம் ஆகியோர் தொடர்பான புலன் விசாரணை சம்பந்தப்பட்ட பதிவேடுகளைப் பார்வையிட வேண்டும் என்று நீதிபதி சிவப்பா தெரிவித்ததையடுத்து இலஞ்சஒழிப்பகம் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. (இ - 3)

## உலக அரங்கில்

## சட்டசபைத் தேர்தல்

புதுடில்லி ஓக. 31

உத்திரபிரதேச சட்டமன்றத் தேர்தல் அடுத்த மாதம் 30ஆம் திகதியும் ஒக்டோபர் மாதம் 3ஆம், 7ஆம் திகதிகளிலும் மூன்று கட்டங்களாக நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. (இ-5)

### சிவராத்திரி நாள் விவகாரம்

# நல்லை ஆதீன முதல்வர் அமைச்சரிடம் ஆட்சேபம்

சிவராத்திரி தினத்தை அரசாங்க விடுமுறை நளாக்குமாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கலாசார, மத விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியிடம் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்க விடுமுறை நாள்கள் பட்டியலிலிருந்து சிவராத்திரி விரத தினம் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து அமைச்சருக்கு எழுதிய கடிதத்திலேயே சுவாமிகள் இவ்வாறு கோரியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் தொண்டமான், பிரதி அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சைவ மக்களின் மூலாதார தெய்வமாக விளங்கும் சிவனைக் குறித்து வழிபாடு செய்யும் முதன்மை விழாக்களில் சிவராத்திரி மகோன்னதமானது. அத்தினத்தின் விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ள செய்தி மிகவும் அதிர்ச்சியை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

சிவபூமி என்று போற்றப்பட்ட இந்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கான இந்துக்களுக்கு இச்செய்தி மனவேதனையைத் தருகிறது. வரலாற்றுச் சிறப்புடைய எங்கள் இந்து ஆலயங்கள் பல அழிவுற்று பூசைகளற்று வழிபாடு ஆற்றமுடியாது இருக்கின்ற வேதனையில் வாடி நிற்கும் போது, மேற்குறித்த விடுமுறை ரத்துச் செய்தி நொந்த மனங்களை மேலும் நோகவைப்பதாக அமைந்துள்ளது.

எனவே இவ்விடயத்தைக் கருத்திற் கொண்டு தாங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் இப்பெருநாளை விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என இந்து மக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடிமகனும் அறநெறியில் ஒழுக வேண்டும். அதுவே எமது நித்திய பிரார்த்தனை. — என்றுள்ளது. (அ)

### ராணுவ கட்டுப்பாடற்ற பகுதிக்கு

## வினாத்தாள் எடுத்துசெல்ல செஞ்சிலுவை உதவும்

யாழ்ப்பாணம், ஒக. 31

வலிகாமத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை நடக்க செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு உதவும்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களை எடுத்துச்செல்லும் பரீட்சைத்திணைக்கள வாகனங்களுக்கு வழித்துணை வழங்கும் பணியில் இந்த அமைப்பு ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சைகளுக்குத் தாம் அளித்த வழித்துணை போன்றே ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கும் வழங்கவிருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## ஒய்வூதியப் பணிகள் பிரதேச செயலகங்களில்

### கோவைகள் அனுப்பப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேச செயலகப் பகுதிகளில் வாழும் ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியம் தொடர்பான பணிகளை அடுத்தமாதம் முதலாம் திகதிமுதல் அந்த, அந்த பிரதேச செயலகங்களிலேயே மேற்கொள்ளலாம் என்று யாழ். அரச அதிபர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

பரவலாக்கல் திட்டத்தின் கீழ் ஓய்வூதியப்பணிகள் பிரதேச செயலகத்துக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

யாழ். செயலகத்தில் இருந்து மேற்கண்ட பிரதேச செயலகங்களுக்கு ஓய்வூதியர்களின் கோவைகள் அனுப்பப்பட்டு வருவதாகவும்—

ஓய்வூதியர்கள் தமது பிரதேச செயலகத்துக்குள் உள்ள வங்கிகளுக்கு தமது ஓய்வூதியக் கணக்கை மாற்றலாம் என்றும்— அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

### புதிய கடவுச்சீட்டு

கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்படும் மோசடிகளைத் தவிர்க்கும் பொருட்டு சர்வதேச மட்டத்துக்கு ஏற்ப புதிய கடவுச்சீட்டுக்களை குடியகல்வு, குடிவரவு திணைக்களம் அடுத்தமாதம் 2 ஆம் திகதி முதல் வழங்கவிருப்பதாக பிரதிக் கட்டுப்பாட்டாளர் எஸ். பரம்பரவானகே தெரிவித்தார்.

# குழந்தைகளை தாக்கும் டெங்குக் காய்ச்சல் நோய்

### நுளம்பே முக்கிய காரணி

யாழ்ப்பாணம், ஒக. 31

அண்மைக்காலங்களில் கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் பரவிவரும் டெங்குக் காய்ச்சல் தற்போது யாழ்ப்பாணத்திலும் காணப்படுவதாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு;

அண்மைக்காலங்களில் பரவிவரும் நோய்களில் முக்கியமான நோய்களில் ஒன்றாக டெங்குக் காய்ச்சல் விளங்குகிறது.

கொழும்பு மற்றும் சுற்றுப்புற நகரங்களில் இதன் தாக்கம் அதிகரித்துள்ளது. எமது பகுதிகளிலும் இந்நோய் காணப்படுகின்றது. நுளம்பின் தொல்லை கூடியிருக்கும் இவ்வேளையில் நாம் ஆரம்ப நிலையில் சிகிச்சை எடுக்காவிட்டால் நோய் பெருகித் தேவையற்ற மரணங்கள் ஏற்படலாம்.

இந்நோய் கூடுதலாக ஆறு மாதம் தொடக்கம் ஆறு வயது வரையிலான பிள்ளைகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை அளித்தால் உயிராபத்து ஏற்படாது.

நோயின் முக்கிய அறிகுறிகளாவன:-

காய்ச்சல் விட்டு விட்டு வருதல்.

★ மூக்கு, வாய், குடலில் குருதி வெளியேற்றம்.

★ உடலில் இளம் சிவப்பு நிறப் புள்ளிகள் காணப்படுதல்.

★ உடல் வீக்கம்.

இந்த நிலை காணப்பட்டால் உடன் தகுந்த சிகிச்சை எடுப்பது அவசியம். நோய் பரவாதிருக்கப் பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை எடுத்தல்:-

★ நுளம்பு பெருகும் சூழ்நிலை இல்லாதொழித்தல்.

★ குறிப்பாக - மழை நீர் தேங்காமல் செய்தல்.

★ வீட்டு அயலைச் சுத்தமாக வைத்திருத்தல்.

★ நுளம்புக் கடியிலிருந்து எம்மைப் 'பாதுகாத்தல்.

★ நுளம்புத் திரி, வலை பாவித்தல்.

அண்மைக் கால நிகழ்வுகளால் நகரின் பல பகுதிகளில் மலகூடக் குழிகள், மூடிகள் வெடிப்புகள் ஏற்பட்டும், குழிகள் உடைந்தும் காணப்படுகின்றன. இவற்றைச் சீர் செய்யாவிடில், மாநகர சபையினால் பொது இடங்களில் நீர்தேங்குவதைக் கட்டுப்படுத்தினாலும் பயனளிக்காது.

ஆகையினால் இந்த நிலை தொடராது மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதாரம் காரணமாகத் திருத்தங்களை மேற்கொள்ள முடியாதவர்கள் மாநகராட்சி மன்றசுகாதாரப் பகுதியுடனோ அல்லது வேலைப் பகுதியுடனோ அல்லது ஆணையாளருடனோ தொடர்பு கொள்ளலாம்.

நுளம்பினால் பரவும் நோய்களைஒழிக்கும்திட்டம்ஒன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## முஸ்லிம் காங்கிரஸின் தேசிய மாநாடு இன்று

### சம்மாந்துறை விழாக்கோலம்

கொழும்பு, ஒக. 31

இன்று நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 14 ஆவது தேசிய மாநாட்டையொட்டி கொழும்பில் இருந்து 7 பேர் கொண்ட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் சம்மாந்துறை வந்துள்ளனர்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டு வரும் மேடை மற்றும் பார்வையாளர் அரங்குப் பகுதி இரவு பகலாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இன்று காலை ஊர்வலங்கள், ஊர்திகள், உலா வரவிருக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் இது வரை ஈட்டிய சாதனைகள் ஊர்தியில் பிரதிபலிக்கவிருக்கின்றன. (இ—3)

### உள்ளூராட்சி ஓய்வூதியம்

யாழ்ப்பாணம்- ஒக. 31

உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் ஒகஸ்ட் மாத ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் வங்கிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார். (இ-5)

## மரக்கறி விலை வீழ்ச்சி

சாவகச்சேரி பொதுச் சந்தையில் மரக்கறி வகைகளின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

கத்தரிக்காய் கிலோ 10 ரூபாவாக விற்கப்படுகிறது.

மற்றைய மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சி அடைந்துள்ளன.

அதே சமயம் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் இம்முறை தக்காளிப் பயிர்ச்செய்கை அதிக விளைவைக் கொண்டுள்ளது.

அதனால் தக்காளிப் பழத்தின் விலை சந்தையில் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மருதனார் மடம் சந்தையில் ஒரு கிலோ தக்காளிப் பழம் மூன்று, நான்கு ரூபாவாக விற்பனையாகிறது.

அடுத்தவாரமளவில் அதன் விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம் என நம்பப்படுகிறது.

மீளக்குடியமர்வின் பின் வலிகாமம் தெற்கில் பல தோட்டச் செய்கையாளர்கள் தக்காளிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். [இ-31-152]

## வெளிவாரிப் பட்டப் படிப்பு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக.31

யாழ். பல்கலைக்கழக 95/96 கல்வியாண்டுக்கான வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கு பதிவுசெய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. (உயர் தர) 'பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றவர்கள் முதல் கலைக்கும், முதல் வர்த்தகத்துக்கும் பதிவு செய்யலாம் என்றும் —

விஞ்ஞான, வர்த்தகப் பிரிவு மாணவர்களும் முதல் கலைக்கு பதிவு செய்யலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதற்கான விண்ணப்பங்கள் நாளை மறுதினம் முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ —3)

## இன்றும் நாளையும் விசேட அடையாள அட்டை

### விநியோகிக்க விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக 31

அடுத்த கிழமை ஆரம்பமாகும் ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள். அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகியோரின் நலன் கருதி விடுமுறை நாள்களான இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் —

கிழமை நாள்களில் இவற்றைப் பெறமுடியாதவர்களின் நலன் கருதியே வார இறுதி நாள்களில் விநியோகம் நடைபெறுகிறது என்றும் —

பொது மக்களுக்கும் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### மரத்திலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக. 31

விளாமரத்தில் இருந்து தவறி விழுந்தவர், விளாமரக் கொப்பு வயிற்றில் ஏறி படுகாயமடைந்தார்.

மல்லாகத்தில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த யேசுதாசன் எமிலீன் பிரான்ஸிஸ் [வயது 15] என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## மருத்துவ பீட மாணவரின் வைத்தியசாலை கிளினிக்

### யாழ். ஆஸ்பத்திரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் வைத்திய சாலைக் 'கிளினிக்' மீண்டும் ஆரம்பமாகியுள்ளது

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ பீட மாணவர்கள் மேற்கொள்ளும் கிளினிக்குகள் போதிய வைத்திய நிபுணர்கள் இல்லாத காரணத்தால் ஆரம்பிக்கப்படாமல் இருந்து வந்தது.

தற்போது வைத்தியசாலையில் பணியாற்றும் ஒன்றிரண்டு வைத்திய நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் மீண்டும் வைத்திய பீட மாணவர்களின் கிளினிக்குகள் ஆரம்பமாகியுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திண்டுக்கல் இரும்புப் பெட்டி 5 பூட்டுக்கள் உடையது, Sharp Radio, சிங்கர் தையல் இயந்திரம், 15K சோனி T V 20 அங்குலம் கலர் ரிமோட் கொன்ரோல் உடையது மற்றும் தளபாடங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வை இடலாம். 42/1 புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (42459)

### புத்தகப் பிரியர்களே!

தரமான தமிழ் - ஆங்கில நூல்களை இரவல் பெற்று வாசித்து மகிழ விஜயம் செய்யுங்கள், லிங்க் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42413)

### ஆங்கிலம் / கணிதம்

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 10, 9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8- 12, பிற்பகல் 3- 6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (42452)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் மூன்று மாத காலத்திற்குள் ஆங்கிலம் பேசப் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, C/o ஜெயந்தி ஸ்ரோர்ஸ் இல: 426 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை சிவன் சந்தி. (42485)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமையாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42437)

### விற்பனைக்கு

பாவித்த தையல் மெசின்கள், றேடியோ என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ். ஆர் ஏஜென்சி, 286, பிரதான வீதி, பருத்தித்துறை. (சி- 2818)

பாவித்த வீட்டுத்தளபாடங்களும், மின் உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு வே. சற்குணராஜன், இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில். 251, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42467)

பெற்றோல் பாவனையிலுள்ள Toyota Corola கார், C.G. 125 (Duluxe) மோட்டார் சைக்கிள், Honda Lead, ஓடுகள், கிடுகுகள், மரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. சிவனடியான், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. அல்லது வைத்தியசாலை நவாலி. (சென் பீற்றர் தேவாலய அருகில்) (42477)

**AL 97 98**

பொருளியல்
திரு. நித்தியானந்தன்
தமிழ்
திரு. ஜெயநிதி
வகுப்புகள் நடைபெறுகின்றன.

**சிவாகி கல்வி நிலையம்**
சாவகச்சேரி.
(42486)

### FOR SALE

Registered Reconditioned Yamaha Mate 50 (MD 90 Model), Yamaha Mate 80, Honda Supercub 50 (Lancer) For Sale. 49, Vidans Lane, Chunduculi, Jaffna. (42480)

### தவறிவிட்டது

ஜெகதீஸ்வரன் வரதன் (உரும்பராய் கிழக்கு, உரும்பராய்) ஆகிய எனது 761210610 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 13-07-96 அன்று நுணாவில்-கைதடிக்கு இடையில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ''அன்னை இல்லம்'', உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (42469)

உ
சாவகச்சேரி

## அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்

அன்புடையீர்!

மேற்படி தேவஸ்தானத்தில் திருப்பணிகள் நிறைவு செய்து மஹாகும்பாபிஷேகம் நடைபெற அன்னை திருவருள் கூட்டி உள்ளாள். ஆகவே திருப்பணிகள் நிறைவுபெற தங்களால் இயன்ற நிதியை அன்பளிப்பாக வாரிவழங்குவீர்! தேவஸ்தானத்தில் அடியார்கள் நேரடியாக கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்வீர்.

நன்றி. இங்ஙனம்:
ப. மகாகணபதி சர்மா
ஆதீன தர்மகர்த்தா.
(42463)

**மாணவர் கவனத்திற்கு!**
(யாழ்)

## புதிய உயர் கல்லூரியின்

கிளை நிறுவனமாகிய

## பிறைற்வே இன்ஸ்ரிரியூட்

மூத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டையிலும்
**8-9-96** இல் இருந்து
**G. A. Q.** [யாழ், பேராதனை]
**B. A.**
விரிவுரைகள் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**A/L 97, 98** (கலை, வர்த்தகம்) வகுப்புக்கள்
**1 – 9 – 96** (3 மணி) ஆரம்பமாகின்றன.

கிராமசேவையாளர்
சமய பாட ஆசிரியர் [பரீட்சைக்கான]
பயிற்சி வகுப்புக்கள்

புதிய பிரிவு ஆரம்பம்: **8-9-96** (4 மணி)

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை
பிறைற்வே இன்ஸ்ரிரியூட்
மூத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை
(42488)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு: 02 — 07 — 1922
உதிர்வு: 01 — 08 — 1996

## திருமதி வீரசிங்கம் தங்கம்மா

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் திருவுருவாய், எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் சுடர் வீசி அணையாத தீபமாகிய எங்கள் அம்மா! எங்கு சென்றீர்கள்! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (31-08-96) நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவன்வீதி, உரும்பராய் மேற்கு,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (42466)

## கோப்பாய் கல்வி நிலையம்

மானிப்பாய் வீதி, கோப்பாய்.

கிராம உத்தியோகத்தர், சமயபாட ஆசிரியர் மற்றும் அரசாங்க பதவிகளுக்கான
போட்டிப் பரீட்சைகளுக்குரிய
பயிற்சி வகுப்புகள் (பிரிவு II)

ஆரம்பம்:- **01 - 09 - 1996** காலை 10.30 மணி
ஆசிரியர்:- துரைசிங்கம் பிரபாகரன்
(B A.; P.G. Dip-in Public Admn.)

இயக்குநர்
(42487)

61ஆம் வருட பிறந்த நாள்

## நினைவலைகள்

அமரர்

## குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை

மண்ணுலகில்: 31–08–1935
விண்ணுலகில்: 03–05–1996

பண்பின் இருப்பிடமே, பாசத்தின் உறைவிடமே, மெய்வருத்தம் பாராது அயராது உழைத்து, எம் குலம் தழைக்க வைத்த குலவிளக்கே! இன்று உமது பிறந்ததினத்தை நினைவுகூரும் வேளையில் உமது ஆன்ம சாந்திக்காக அனுதினமும் அமலனை வேண்டுகின்றோம். இறைவா இவருக்கு நித்திய சாந்தியை அளித்தருளும்.

மனைவி (அ. விமலா),
பிள்ளைகள்.

இராமன் வளவு,
அச்சுவேலி. (42479)

## நீங்கா நினைவில் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 1940–05–17
மறைவு: 1996–08–01

## அமரர் செல்லர் இரத்தினம்

(யாழ் / கட்டுடை தமிழ்க்கலவன் வித்தியாசாலை ஆசிரியர்)

அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் திருவுருவமாகவும் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் சுடர் வீசி அணையாத தீபமாகி எங்களைத் தவிக்க விட்டுச் சென்ற ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
- குடும்பத்தினர்

கராச்சடி,
சண்டிலிப்பாய். (42483)

31ஆம் நாள்

## கண்ணீர்க் கதைகள்

தாயின் மடியில்: 26 — 03 — 1989
சிவனடியில்: 01 — 08 — 1996

## யோ. தினோஷா

(மாணவி, யா/காசிப்பிள்ளை வித்தியாலயம், நல்லூர்)

அப்பாவின் குஞ்சு
அம்மாவின் பிஞ்சு
எங்களை எல்லாம் மிஞ்சி
எங்கம்மா போனாய் வஞ்சி
பங்குனியில் பவனித்த பொன் விளக்கே
ஆடியில் போனதென்ன மண் விளக்கே
எப்பம்மா ஓடோடி வருவாய் எங்களிடம்
விண் விளக்கே.

உன் பிரிவில் வாடும்;
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

வாலை அம்மன் பேக்கரி உரிமையாளர்,
திருநெல்வேலி கிழக்கு. (42489)

## உதயன்

## விதை நெல் கிடைக்குமா?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விதை நெல்லுக்குப் பெரும் தட்டுப்பாடு உண்டாகியுள்ளது. ஒரு புசல் விதை நெல் இரண்டாயிரம் ரூபாவுக்கும் கிடைப்பது அரிதாகிவிட்டது. இது வழமையைவிட நான்குமடங்கு.

சென்ற வருடத்திய காலபோகத்தில் குடாநாட்டில் நெற்செய்கை முற்றாக அற்றுப் போனதாலேயே விதை நெல்லுக்கு இந்தளவுக்குத் தட்டுப்பாடு உண்டாகியுள்ளது என்பது எல்லோரும் அறிந்ததே. குறிப்பாக வலிகாமத்தில் நாம் விதைத்த வயல் நிலங்களை அப்படியே விட்டு விட்டு விவசாயிகள் இடம் பெயர்ந்ததால் இப்பகுதியில் நூற்றுக்கு நூறு வீதம் நெற்செய்கை பிழைத்தது.

தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களிலும் குறைந்த மழை காரணமாக நெற்செய்கை பாதிப்புற்றது அது போலவே வன்னியிலும் நெற்செய்கை குன்றியது.

விதை நெல் தட்டுப்பாடு நாடளாவிய பிரச்சினையாதலால் கிழக்கிலிருந்தோ தெற்கிலிருந்தோ குடாநாட்டுக்கு விதை நெல்லைப் போதிய அளவில் தருவிக்க இயலாது.

இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கொழும்பில் இருந்து மூவாயிரம் புசல் விதை நெல் மட்டுமே தருவிக்கப்பட இருக்கிறது. ஆனால் அதுவும் கப்பல் மூலம் வந்து சேர்வதில் தாமதம் ஏற்படுவதால் இந்த வருடமும் குடாநாட்டின் நெற்செய்கை பாதிக்கப்படும் ஆபத்து உண்டு.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து தமது சொந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த வலிகாமம் மக்கள் குத்தரிசி பெறுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

நாள் கணக்கில் வரிசையில் நின்று வெயிலில் காய்ந்தும் ஒரு பிடி அரிசி தானும் வாங்க முடியாமற் சென்றவர்களும் உளர். இப்போது கூட ஒரு கிலோ குத்தரிசிக்கு 33 ரூபா கொடுக்க வேண்டியுள்ளது.

தரைப் போக்குவரத்து இன்றி கப்பல் மூலமே யாழ்ப்பாணத்துக்குத் தேவையான அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்கள் இப்போது எடுத்து வரப்படுகின்றன. இந்த நிலை அனேகமாக நீண்டு தொடரும் சாத்தியம் உண்டு.

ஆகையால் குடாநாட்டு மக்கள் தாம் விரும்பி உண்ணும் குத்தரிசிக்கு ஏனைய பகுதி மக்களை விட அதிக விலை அழவேண்டி வரும். இதனைத் தவிர்ப்பதற்கு இங்கு உரிய அளவில் நெற்செய்கை பண்ணப்படுவது அவசியம்.

குடாநாட்டில் இந்த மாரி போகத்தில் நெற் செய்கை உரிய அளவில் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே இங்கு அரிசித் தட்டுப்பாடும் விலை உயர்வும் உண்டாகாமல் தடுக்கலாம்.

குடாநாட்டு மக்களின் அரிசித் தேவையில் கணிசமான அளவையேனும் இங்கு உற்பத்தி செய்தால், முழுத் தேவைக்கும் கொழும்பிலிருந்து கப்பல் வருவதை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டியதில்லை.

எனவே பருவத்தே பயிர் செய்யக் கூடியதாக விதை நெல்லை விரைந்து தருவித்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். காரணங்களைக் கூறிக்கொண்டிருந்தால் காரியமாகாது. பாதிக்கப்படுபவர்கள் மக்களே. இதுபோன்ற விடயங்களில் துடிப்பான விரைந்த, துடித்துரைக்கும் அக்கறையான செயற்பாடு தேவை.

வடக்கு-கிழக்கில் தற்போது நடப்பது

# பூட்டிய கதவுகளுக்கு பின்னால் நடக்கும் போர்

## குரு முதல்வர் இமானுவல் பி.பி.ஸிக்கு பேட்டி

லண்டன், ஓக. 31

இலங்கையின் வடக்கு — கிழக்குப் பகுதிகளில் நடக்கும் போர் பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் நடக்கும் போர்.

அதாவது பல மாதங்களாக செய்தித் தணிக்கை இருந்து வருகிறது. செய்தியாளர்கள் வடக்குக்குப் போக முடியாது. வெளிநாட்டவர்களும் அங்கு போக முடியாது. ஆசையினாலே தெற்கிலிருக்கும் சிங்கள மக்களுக்கு இந்தப் போரைப்பற்றி சரிவரத் தெரியாது. அரசாங்கப் படைகள் விடுக்கும் செய்திகள் மட்டும்— அதாவது அவர்களுக்குச் சார்பான செய்திகள் மட்டும் கொடுக்கப்பட்டு வருகின்றன. உண்மையான நிலை அவர்களுக்குத் தெரியாது.

யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையின் குரு முதல்வர் இமானுவல் வண்டனில் பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மீதான தாக்குதலின் போது மக்கள் குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லாமல் கால்நடையாக தெற்கு, கிழக்கு, மேற்குத் திசைகளை நோக்கி நடைபயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

மரங்களின் கீழிருந்து அசுத்தமான நீரைப்பருகினார்கள். நீரைச் சுத்தமாக்குவதற்குரிய குளோறினைக் கூட 3 மாத காலமாக அரசாங்கம் தடை செய்திருந்தது

இதனால் மக்கள் பல நோய்களுக்குள்ளாகியுள்ளனர். அங்கு நீரில்லை. உணவு இல்லை. தங்க இடமில்லை. மக்கள் அலையலையாக இடம்பெயர்ந்தார்கள்.

அதாவது பண்டத்தரிப்பு மாதகலிலிருந்துயாழ்ப்பாணத்துக்கு வந்தவர்கள் —

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிக்கு வந்தவர்கள் —

தென்மராட்சியிலிருந்து கிளிநொச்சிக்கு வந்தவர்கள் —

இப்போது நான்காவது ஐந்தாவது தடவையாகஇடம் பெயர்கின்றனர்.

இறுதியில் சிறிய கடதாசிப் பையுடனேயே போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சூரியப் பிரகாசம் -3 இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து வந்த 50 ஆயிரம் மக்களுக்கு நிவாரணம் கொடுக்கக் கூடாது என்று அரசாங்கம் தடை விதித்தது. ஏனெனில் அவர்கள் அனைவரும் புலிகளின் ஆதரவாளர்கள் என்பதாலாம்.

நிவாரணத்துக்கென அனுப்பப்படும் பொருள்களைப் புலிகள் எடுக்கிறார்கள் என அரசாங்கம் கூறுவது முழுப் பொய்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் இந் நிவாரணத்தைப் பகிர்ந்து கொடுக்கின்றன ஆனால் அவர்களுக்கும் சாப்பிட உரிமை இருக்கின்றது.

அதற்காக அவர்கள் மிதமிஞ்சிய விதமாக எடுக்கிறார்கள் என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டுவது மிகவும் தவறு.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

## 4 மாதங்களில் 1 இலட்சம் பேருக்கு வேலை

கொழும்பு, ஓக. 31

அடுத்த நான்கு மாதங்களில் ஓர் இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும என்று ஜனாதிபதி-சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சமுர்த்தி 2 ஆம் கட்ட அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இளைஞர்களின் தொழில் பிரச்சினையை தீர்ப்பதற்கும், நாட்டின் கைத்தொழில், விவசாயத்துறையை சீர்ப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## 30 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்ய முடிவு

கொழும்பு, ஓக. 31

அரிசி விலை அதிகரிப்பை தவிர்க்கும் விதத்தில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கூ. மொ. வி. ஸ்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

கடந்த சில வாரங்களாக பகிரங்க சந்தையில் அரிசியின் விலை ஏற்றம் அடைந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் அரிசியை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது மிகவும் அவசியமானது என்று உணவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## வீர மாமயில் ஏறும் வேலவா!

வீர மாமயில் ஏறும் வேலவா - விளங்கு
கௌரி பாலகா வா.
கானக் குறத்தி மகிழும் பாதா
காக்கும் கடவுள் துதிக்கும் நாதா.
எனக்கும் உனக்கும் பேதம் ஏனோ?
எடுத்துச் சொன்னால் போதும் போமோ
மணக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா.

— யோகர் சுவாமிகள்

## நாதமணி கேட்குதெடி!

நல்லூர்க் கோயிலிலே வெண்ணிலாவே — நல்ல
நாதமணி கேட்குதெடி வெண்ணிலாவே
பொல்லாத் துயர்கள் தீர வெண்ணிலாவே — அங்கு
பூசைமணி கேட்குதெடி வெண்ணிலாவே
எல்லோரும் எல்லாம் பெற வெண்ணிலாவே — எங்கள்
இதயங்கள் பொங்குதெடி வெண்ணிலாவே
நல்லோர்கள் நன்மை பெற வெண்ணிலாவே — நாட்டில்
நாளும் நல்ல இசை கேட்கும் வெண்ணிலாவே
தேரோடும் வீதியெங்கும் வெண்ணிலாவே —நிதம்
தெய்வமணங் கமழுதெடி வெண்ணிலாவே.

- ப. க. மகாதேவா

நல்லூர் உற்சவகால சிறப்பு அம்சம்

## சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

காங்கேசன் சிமெந்து ஊழியர்களின் ஜூன், ஜூலை மாதச் சம்பளக் கொடுப்பனவு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தேசிய கல்வி டிப்புளோமா செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக 31

தேசிய கல்வி நிறுவக யாழ். இந்துக்கல்லூரி நிலைய கல்வி டிப்புளோமா செயலமர்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (இ)

## றின் மீனும் நெத்தலியும் எத்தனை காலத்திற்கு?

எமது நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான தொழில்கள் விவசாயமும் மீன்பிடியும் ஆகும்.

யாழ். மாவட்டத்தில் இன்று விவசாயப் பயிர்கள், மரக்கறிவகைகள் ஓரளவு மலிவாக உள்ளன. ஆனால் புரதச் சத்துத் தரும் மீனின் விலை அதிகமாக உள்ளது. அதனால் மக்கள் கொழும்பில் இருந்து வரும் றின்மீன், நெத்தலிக் கருவாடு போன்றவற்றை எதிர்பார்த்திருக்க வேண்டி உள்ளது.

குடாநாட்டில் மீன்பிடித் தொழிலையே நம்பி இருக்கும் குடும்பங்கள் ஏராளம். ஆனால் குறிப்பிட்ட சில கடற் பகுதியில் மட்டுமே மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தீவகம் உட்பட பல பகுதிகளிலும் மீன்பிடிப்பதற்கு அனுமதி பெறுவதற்கு கடற்றொழில் உத்தியோகத்தர்கள் முயற்சி செய்வது அவசியம்.

அதிக கடற் பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதிப்பதன் மூலம் பல குடும்பங்களின் கஷ்ட நிலையைப் போக்கலாம்; மீனின் விலையும் குறையும். நெத்தலியையும், றின்மீனையும் எதிர்பார்க்கத் தேவையில்லை.

ஒரு காலத்தில் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடுகளுக்குக் கடல் உணவு ஏற்றுமதி செய்யப்பட்டது, தற்போது அந்த நிலை இல்லை.

### வாசகர் திருமுகம்

விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு விதை நெல் முதலியனவற்றை கப்பல் மூலம் தருவித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிய வருகிறது.

கடற்றொழில் பகுதியில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் அக்கறை எடுத்து மீனவர்களுக்குத் தேவையான வள்ளங்கள், இயந்திரங்கள், வலைகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கக் கூடாதா?

மீன்பிடிக்கும் கடற்பிரதேச எல்லையை அதிகரிப்பதற்கு முயற்சி இல்லாமல் எதுவும் நடவாது. இது குறித்து அக்கறை எடுக்குமாறு அதிகாரிகளை விநயத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

மீன் வகைகளின் விலைகள் குறைய மக்களுக்கு உதவக் கூடாதா? றின் மீனும், நெத்தலியும் எத்தனை நாளைக்கு?

த. ராஜகந்தன்

அராலி.

## பயணக் கட்டணத்தில் வேறுபாடு எதற்காக?

முன்னர் எரிபொருளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினாலும், நாளுக்கு நாள் மாறுபடும் அவற்றின் விலை காரணமாகவும் குடாநாட்டில் தனியார் பஸ் கட்டணங்கள் மக்களை பல சிரமங்களுக்கு உள்ளாக்கியது உண்மைதான்.

ஆனால், இன்றுள்ள நிலைமையில் எரிபொருளை கட்டுப்பாட்டு விலையில் தாராளமாகப் பெறக்கூடியதாக உள்ளது. அதே வேளை டீசல் வாகனங்களுக்கு விசேடமாக அந்தந்தப் பிரதேசங்களுக்கான உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சுடன் டீசலையும் வழங்கி வருகிறார்கள்.

இத்தகைய நிலையிலும் தனியார் பஸ் கட்டணங்கள் ஏன் மாறுபட்டு நிற்கின்றன என்பது தான் எமக்குப் புரியாமல் இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கான தனியார் பஸ்கட்டணம் ஒருவழிப் பயணத்திற்கு பத்து ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் —

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கான தனியார் பஸ்கட்டணம் ஒரு வழிப் பயணத்திற்கு ஒன்பது ரூபாவாகக் குறைக்கப் பட்டுள்ளது என்றும் — செய்திகள் வெளிவந்துள்ளன.

போக்குவரத்துக் கட்டணங்கள், தூரத்தைப் பொறுத்துத்தானே நிர்ணயிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கான தூரம் அண்ணளவாக இருபது மைல்கள். அதே வேளை யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கான தூரம் அண்ணளவாக பத்து மைல்களாகும்.

எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது சாவகச்சேரிக்கான பயணக் கட்டணம் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதனை அதற்குரியவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்

ஆதாயமும் இருக்கத்தான் வேண்டும் அதே நேரத்தில் சேவை மனப்பான்மையும் இருக்கத்தானே வேண்டும். இந்த வகையில் வடமராட்சி தனியார் மினிபஸ் சங்கத்தினர் பாராட்டுக்குரியவர்களே.

சண். தியானேஸ்வரன்

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

## ZION CHURCH
## AN INAUGURAL SERVICE

In the Renovated Church with all Branches

**Sunday 1st September 1996 at 10.00 a. m**

All are Welcome

## சீயோன் தேவாலயம்

புனரமைக்கப்பட்ட ஆலயத்தில் அனைத்து கிளைகளும் இணைந்த

## ஆரம்ப ஆராதனை

**01–09–1996** ஞாயிறு காலை **10- 00** மணி

24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

24. Ramiah Chettiar Lane,
Jaffna.

(42389)



## எள்ளு விற்பனை

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் தரமான, இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை எள்ளு **1410** கிலோ மொத்த விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் 07–09–96 க்கு முன்னர் எமது சங்கத்தில் நேரில் வந்து விவரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

பதில் பொது முகாமையாளர்

(சி2824)


## சாவகச்சேரி நகராட்சி மன்ற பொது நூலக அங்கத்தவர்களுக்கான
## அறிவித்தல்

சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் பொது கிளை நூலகங்களில் இரவலாகப் பெற்றுச் சென்ற புத்தகங்களைப் பெற்றுக் கொண்ட நூலகங்களில் 01-09-96 ஆம் திகதியிலிருந்து இரு வாரங்களுக்கு முன்பதாக ஒப்படைத்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சி- நட்ராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
29–08-96

(சி/2823)


# பெற்றோர்களே!
# போலியோ
## உங்கள் பிள்ளைக்கு வந்தால்....

அவர்களின் காலை அல்லது கையை இழுத்து ஊனமாக்கினால்....

அவர்கள் எதிர்காலத்தை எண்ணி ஏக்கப் பெருமூச்சு விட நேரிடும்...

அப்படி ஒரு துரதிர்ஷ்டம் ஏற்படாமல் இருக்க உங்கள் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுங்கள்.

அதற்கான நாள்

## செப்ரெம்பர் 7

PolioPlus


# தபால் பொதிகள் பஸ்மூலம்

யாழ்ப்பாணம், ஓக. 31

குடாநாட்டுக்குள் இ.போ.ச பஸ் மூலமான தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளுக்கான தபால் பொதிகள் தினமும் இ. போ. ச பஸ்கள் மூலம் அனுப்பப்பட்டு வருவதாகவும்—

தற்சமயம் கொடிகாமம் வரை நடைபெறும் இச்சேவை விரைவில் பளை வரை நீடிக்கப்படும் என்றும்— பிரதம தபாலதிபர் திரு. அ- கோடீஸ்வரன் கூறினார்.

இதுவரை காலமும் தபால் பொதிகளை தபால் சேவகர்கள் சைக்கிளில் எடுத்துச் சென்று விநியோகித்து வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நாளை முதல் பாணின் விலை 8 ரூபா

யாழ்ப்பாணம், ஓக. 31

நாளை முதல் பாணின் விலை 8 ரூபாவாக இருக்கும் என்று யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மாவின் விலை ஏற்றத்தை அடுத்து பாணின் விலை உயர்த்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

தமிழகம்*..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போல் தீவிரவாத நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் இடம் பெறுவதை மாநில அரசு விரும்பவில்லை என்பது வெளிப்படை.

அத்துடன் தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு வருவதையும் மாநில அரசு விரும்பவில்லை என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (இ-3)

---

மழை காலம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தால், கொழும்பில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். அவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்படும் விமான சேவைக்கு பதிவு செய்வோர் மீது பிரயோகிக்கப்படும் கெடுபிடிகளை நீக்கவேண்டும்.

★ தேசிய அடையாள அட்டையைப் பெறுவதில் தமிழ் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். நடைமுறைக்குச் சாத்தியமல்லாத விதி முறைகள், கெடுபிடிகள் ஆகியவற்றால் அவர்கள் கஷ்டம் அனுபவிப்பதை நீக்க வேண்டும்.

★ வடக்கு — கிழக்குக்கு வெளியே பணியாற்றும் தமிழ் அரச ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் சுமுகமாகப் பணியாற்ற முடியாத சூழ்நிலை நிலவுகிறது. தேவையற்ற சந்தேகங்கள் மற்றும் தனிப்பட்ட கோபதாபங்கள் நிமித்தம் பாதுகாப்புக் காரணங்கள் என்ற போர்வையில் அவர்கள் கெடுபிடிகளுக்கும் அவமானத்துக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகிவருகின்றனர். சேவைமூப்பு, போதிய தகுதியிருந்தும் பதவி உயர்வு வழங்குவதில் காலதாமதம் செய்யப்படுகிறது. கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கிடைக்காமல் ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்த அவல நிலைகள் நீக்கப்பட வேண்டும்.

★ மொழிக்கொள்கை விடயத்தில் தமிழில் தேசிய கீதம் பாட அரசமைப்பில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் சிங்கள மொழி மூலமான தேசிய கீதமே ஒலிபரப்பப்படுகிறது.

★ இந்துக்களின் முக்கிய தினமான மகாசிவராத்திரி, முஸ்லிம்களின் முக்கிய பண்டிகையான ஹஜ் ஆகிய தினங்கள் விடுமுறையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இதை மறு பரிசீலனை செய்யவேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-3)

## போலியோ தடுப்பு மருந்து

செப்ரெம்பர் 7 ஆம் திகதி பயன்படுத்துவதற்குத் தேவையான போலியோ தடுப்பு மருந்து நேற்று வெள்ளிக்கிழமை விமானம் மூலம் எடுத்துவரப்பட்டது.

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் இம்மருந்து பலாலியிலிருந்து கொண்டு வரப்பட்டது (இ-5)

## பொஸ்கோ அதிபருக்கு பாராட்டு விழா

சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கம் பெற்ற யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்செல்வி எம். ஜெறோமைப் பாராட்டும் நிகழ்ச்சி இன்று வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

வித்தியா[illegible] ஆசிரியர் கழகம், அபிவி[illegible] சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன. [இ-3]

## அங்குரார்ப்பண வைபவம்

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதையொட்டிய பிரதேச செயலக அங்குரார்ப்பண வைபவம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்: [இ-117]

உரிய மருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றார்.

அவரது நோய்க்கு 'றொசப்பின்' என்ற ஊசி மருந்து அவசியம் என்று கூறப்பட்டது.

குறிப்பிட்ட ஊசி மருந்து நீண்ட நாள்களுக்கு முன்னரே யாழ். ஆஸ்பத்திரியில் தீர்ந்து போய்விட்டது.

அதனால் தனியார் மருந்தகங்களில் பெறுவதற்குச் சிறுமியின் பெற்றோர்கள் முயன்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மருந்தகங்களுக்கு மூன்று நாள்களாக அலைந்தனர். ''றொசப்பின்'' மருந்து கிடைக்கவில்லை,

அந்த மருந்து கிடைக்காததால் சிறுமியின் உயிரைக்காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களில் பேசப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் ''றொசப்பின்'' மருந்து மட்டும் தான் இல்லை என்பதில்லை.

'வென்ரோலின்', 'பிரிட்ரோன்', 'இன்டோசிட்', 'புறூபன்'. 'வலியம்', 'விற்றமீன் பி. கொம்பிளெக்ஸ்' போன்ற சாதாரணமாகப் பாவிக்கப்படும் மருந்து வகைகளும் இல்லை.

இவற்றை வெளியார் மருந்தகங்களில் வாங்குமாறு சிட்டு எழுதிக் கொடுக்கப்படுகின்றது!

வெளியார் மருந்தகங்களிலும் பலமருந்து வகைகள் விற்பனைக்கு இல்லை. கிடைத்தாலும் யானை விலை, குதிரை விலை விற்கிறார்கள்.

இந்த நிலை நீடித்தால் மருந்துத்தட்டுப்பாட்டால் மேலும் பலர் உயிரிழக்கும் ஆபத்து உண்டு என்று வைத்திய வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (அ-15)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் தெய்வேந்திரம்
(கூட்டுறவுப் பரிசோதகர்)

தென்மராட்சி பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை புரிந்து, எமது சங்கத்திற்கும் சேவையாற்றி 27-08-1996 ஆம் திகதி காலஞ்சென்ற உயர் திரு. ஆறுமுகம் தெய்வேந்திரம் அவர்களுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத்தெரிவிப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்.

தென்மராட்சி மேற்கு,
ப. நோ. கூ. சங்கம், கைதடி.
29-08-1996.

(சி/2827)

## மரண அறிவித்தல்

### தணிகாசலம் ரகுநாதன்
(ரகு அண்ணை)

ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட தணிகாசலம் ரகுநாதன்(ரகு அண்ணை) கிளிநொச்சியில் காலமானார்.

இவர் தணிகாசலம், காலஞ்சென்ற பத்மாதேவி தம்பதிகளின் மகனும், பத்மநாதன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்). காலஞ்சென்ற சண்முகநாதன் (முன்னாள் நீதிமன்ற லிகிதர்), கதிர்காமநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற யோகதேவி, உமாதேவி (மக்கள் வங்கி உத்தியோகத்தர்), பஞ்சநாதன் (நியூசிலாந்து), Dr. ஆறுமுகநாதன் (அமெரிக்கா) ஆகியோரது சகோதரனும், கனகாம்பிகை, இந்திராதேவி, காலஞ்சென்ற கமலாதேவி, கருணாதேவி, ஆலாலசுந்தரம் (நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம்), அம்பிகா (நியூசிலாந்து), நந்தினி (அமெரிக்கா) ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 26-07-96 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
த. பத்மநாதன்
ஆ. உமாதேவி
(சகோதரர்கள்)

17/7, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(42495)

இப்பத்திரிகை ந[illegible]பூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால் ய[illegible]ாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/1 இலக்கத்திலுள்ள அவர்களது[illegible] பணிமனையில் 31-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெ[illegible]ற்றது.